[திரு. தங்கம் தென்னரசு] [2024 பிப்ரவரி 19

அவர்களின் பிறந்த நாளன்று மதுரையில் தொடங்கப்பட்டு, பிறகு கடந்த 2023 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 30,992 அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 15 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், மாணவர்களின் வருகை உயர்ந்துள்ளதோடு, அவர்களின் ஊட்டச்சத்தும், கற்றல் திறனும் மேம்பட்டுள்ளது என ஆய்வுகள் தெரிவித்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

60. "பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும், எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்" என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தினை (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் முழுமையாகச் செயல்படுத்திட, தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் சுமார் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில், வரும் கல்வி ஆண்டு முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

61. தமிழ்நாட்டில் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும்பொருட்டு "ஊட்டச்சத்தை உறுதி செய்" என்ற திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, அதன் விளைவாக, ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளில், 74 சதவீத குழந்தைகள் இயல்புநிலைக்கு முன்னேறியுள்ளனர். இன்னும், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ளவர்களாகக் கண்டறியப்படும் 6 மாதத்திற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளின் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்துப் பெட்டகம் வழங்கப்படும். மேலும், குழந்தைகள் மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்திடும் வகையில், வரும் நிதியாண்டில் சுமார் 70 கோடி ரூபாய் செலவில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 500 குழந்தைகள் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக வரும்